**நில ஆர்ஜித வழக்குகல் சிறப்பு சார்பு நீதிமன்றம் அரக்கோணம்**
அ.வ.எண் . 19/2019

Deposition of Witness : DW. 1

இந்நீதிமன்ற நிலை 2 உதவியாளர் திரு. சுரேஷ் அவர்களால் சத்திய பிரமாணம் செயவிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சி 1ன் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாளில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

கோமடம் ராமசாமி மனைவி ரத்திணம்மாளை தெரியுமா என்றால் எனக்கு ரத்திணம்மாளை தெரியும். ரத்திணம்மாள் கோமடம் ராமசாமி மனைவிதான் என்றால் சரி. அவர்களது வாரிசு கணகவல்லியம்மாள். கணகவல்லியின் வாரிசு இரண்டு மகள் புஷ்பவல்லி, ராஜேஷ்வரி ஒரு மகன் சந்தான கோபாலகிருஷ்ணன். வழக்குறையில் சந்தான கோபாலகிருஷ்ணன் மட்டும்தான் கணகவல்லியின் வாரிசு என்று சொல்லியுள்ள விவரம் தெரியும். பதில் உறையில் கணகவல்லிக்கு இரண்டு மகள் இருக்கும் விவரத்ததை சொல்லியுள்ளேன் பெயரைக் குறிப்பிடவில்லை. கணகவல்லி எனது தந்தைக்கு சொத்தை கொடுத்துவிட்டு ஆந்திராவுக்கு சென்றுவிட்டார். கணகவல்லியின் வாரிசு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கணகவல்லியின் மகள்கள் உயிரோடு உள்ளார்களா என்பது பற்றி அவர்கள் முகவரி எனக்கு தெரியாது. கணகவல்லிக்கு பெண் வாரிசுகள் உள்ளார்கள் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் தட்டோடு வீடு இருந்ததா என்றால் எ, பி இரண்டும் ஒரே சொத்துதான். தாவா சொத்தில் மாடிவீடு உள்ளதா என்றால் நான் மாடிவீடு கட்டி குடியிருக்கிறேன். மாடிவீடு தாவா சொத்தில் செட்டி தெருவில் பாதியில் உள்ளது. எனது தந்தை 90 ரூபாய்க்கு தாவா சொத்தை வாய்மொழியாக கணகவல்லியிடம் 1966 ல் கிரயம் பெற்றார். பதில் உறையில் மேற்படி விவரத்தை நான் கூறவில்லை. பதில் உறயைில் தாவா சொத்து எனது தந்தைக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தந்தையின் சுயாஜித சொத்து என்று நான் சொல்லவில்லை. தற்போது எனது வயது 60, சுமார் 58 இருக்கும். எனது தந்தை கிரயம் பெற்றபோது என்ன வயது இருக்கும் என்று எனக்கு தெரியாது. எனது தந்தை சொல்லிதான் கிரயம் பெற்ற விவரம் தெரியும் நேரடியாக தெரியாது. எனது தந்தை கிரயம் பெற்று 2, 3 வருடங்கள் கழித்து அதில் உள்ள குடிசை வீட்டில் வசித்தபோது கூறினார். எனது தந்தை கிரயம் பெற்றதாக கூறிதான் எனக்கு தெரியும் என்று பதில் உறையில் சொல்லவில்லை. நான் கட்டியுள்ள மாடிவீட்டிற்கு வடக்கு பக்கம் குடிசை இருந்தது.

செட்டி தெருவை ஒட்டி வடக்கு பக்கம் சிமென்ட் சீட்டு போட்ட வீடு அடுத்து மாடிவீடு அதன் பக்கத்தில் எனது தந்தை கட்டிய கூறை வீடு இருந்தது. எனது தந்தை கிரயம் பெற்றவுடனே கூறை வீடு கட்டினார். குடிசை வீடு 1966 ல் இருந்து 2009 வரை இருந்தது. எனது தந்தை கூறைவீட்டிற்கு தவறாமல் வரி கட்டியுள்ளார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**